Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 | கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன் சங்.144:9 | ஜுலை-ஆகஸ்ட் 2019

No.8

## உலகத்தில் அன்பு கூராதிருங்கள்

***Do not love the world***

Dave Butts

ஜான் பன்யன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபடியால் சிறையிலடைக்கப் பட்டார். 1600-ம் ஆண்டுகளில் உறுதிப் படுத்தப்பட்ட சபையிலிருந்து உரிமை பெற்றால் மட்டுமே ஒருவர் பிரசங்கிக்க முடியும். ஆனால் ஜான் பன்யனிடம் அந்த உரிமை இல்லை. எனவே சட்டத் துக்குப் புறம்பாக பிரசங்கித்த படியால் 12 ஆண்டுகள் சிறையிலிருந்தார். அந்த சமயத்தை அவர் ஞானமாக செலவு பண்ணினார். சட்டத்தோடும் அரசாங்கத் தோடும் ஏற்பட்ட இந்த அனுபவம், இவ்வுலகின் அமைப்புகள் கிறிஸ்துவின் அரசோடு ஒத்துப் போகவில்லை என்பதைப் போதித்தன. அவர் சிறையின் அறையிலிருந்து கொண்டே எழுதினார்.

அவர் மந்தமான இறையியல் கட்டுரையை உலகத்திற்கு எதிராக எழுதவில்லை. பதிலாகக் கதை வடிவில் ஒரு பிரயாணி "நாசம்" என்ற சொந்தப் பட்டணத்திலிருந்து அழகிய தெய்வீக பட்டணத்திற்குப் பிரயாணம் செய்கி றான் என்று ஆரம்பிக்கிறார். அவனது பாதையில் அவன் **கிறிஸ்தியான்** என்ற பெயருடன் வழிநடக்கிறான். அனேக வீரச்செயல்கள், பயங்கரங்கள், சொகுசுகள், கண்ணிகள் போன்றவை அவனை வழிவிலகச் செய்கின்றன.

பலவேளைகளில் அவனை அவனது பிரயாணத்திலிருந்து தடுக்கிற மக்களை சந்திக்கிறான். தனது சொந்தப் பட்டணமாகிய நாசத்திலிருந்து புறப் பட்டவுடன் தன் பழைய நண்பனாகிய 'பிடிவாதம்' என்பவனை சந்திக்கிறான். அவனது கேள்வி, "இந்த உலகத்தை யெல்லாம் விட்டுவிட்டு எவற்றைத் தேடுகிறாய்?" என்பது. பதிலாக அவன், "அழியாததும், அசுத்தமில்லாததும், வாடாததுமான ஒரு சுதந்திரத்தைத் தேடுகிறேன்" என்றான்.

*1 யோவா.2:15-17 படிக்க.*

கிறிஸ்தியானைப்போல நாமும் ஒரு புதிய பட்டணம் செல்லும் பிரயாணத்திலிருக்கிறோம். இதில் அனேக ஆபத்துகள் உண்டு. சிலவை பயங்கரமாகவும் சிலவை மிதமாகவு மிருக்கும். மிதமாயிருப்பவை மிக ஆபத்தானவைகள். இக்கதையில் **கிறிஸ்தியான்** ஆரம்பத்திலே உளையான படுகுழியில் விழுந்துவிடுகிறான். அவனது முதுகிலிருந்த பாரம் அதிகமானபடியால் அவனால் கரையேற முடியவில்லை. எனவே தப்புவதற்காக தன்னோடு சென்ற ஒரு பிரயாணியின் உதவியை நாடுகிறான். அப்போது ஒரு உலக ஞானியிடம் ஓடுகிறான். அவனோ மாம்ச சிந்தையின் பட்டணத்திற்குத் திருப்பி விடுகிறான். அதன் சட்ட திட்டங்கள் ஞானமாய்த் தோன்றினாலும் அப்படி யல்ல என்று உணர்ந்து இதிலிருந்து விடுபட்ட அவன் 'பரிதாபம்' என்ப வனை சந்திக்கிறான். நன்மையான எல்லாவற்றையும் இப்போது அனுபவிப் பதுதான் சந்தோஷம் என்று அவன் ஆலோசனை கூறுகிறான்.

முன்னே செல்லும்போது தெய்வீகப் பட்டணத்தின் ஆண்டவரின் உதவியாளர்களையும் அவன் ஆங் காங்கே சந்திக்கிறான். வழியில் சந்திக்க விருக்கும் யுத்தங்களுக்குப் போதுமான ஆயுதங்களையும், பயிற்சியையும் பெறு கிறான். மரண இருளின் பள்ளத்தாக்கைக் கடக்கும்போதும், மாயாபுரி பட்டணத் தில் பாடுகளோடு போராடும்போதும், ஆதாயம் என்ற குன்றின் பேராசையி லிருந்து விலகியோடவும் சந்தேகத்தின் மாளிகையில் ஏமாற்றம் என்ற அரக்கனால் பிடிபடாமலிருக்கவும் இந்த ஆயுதங்கள் தேவையாயிருந்தன.

தேவன் அழைத்த பட்டணத் திற்குள் செல்லுமுன் அவன் செல்லுமிட மெல்லாம், யாரோ, எதுவோ அந்த ஏழைப் பிரயாணி தன் பாதையை விட்டு விலகச்செய்தன. ஆனால் தேவனு டைய பலத்த உதவியாலும், அவனது விடாத விசுவாசத்தாலும் இறுதியாக அவன் அந்த ஒளியின் பட்டணத்தை அடைகிறான். அங்கு தேவன் தாமே வாசம் செய்கிறார். அவரே அவனை வரவேற்று நித்தியமான பரிசினையும் அளிக்கிறார்.

வேதம் நம்மைப் பிரயாணிகள் என்று அழைப்பதை நாம் மறந்து விடுகிறோம். இவ்வுலகில் நாம் பரதேசிகள். இயேசு தம் சீஷரைக் குறித்து, "நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல" யோவா.17:16. அவர் தாம் ஒரு இடத்தை அவர்களுக்காகவும், நமக்காகவும் ஆயத்தம் பண்ணச் சென்றிருக்கிறார். நம்மை அங்கு கொண்டு சேர்க்க மறுபடி யும் வருவார். அது நமக்கு வாக்களிக்கப் பட்ட நிலையான இடம். நாம் இப்போது தங்குமிடம் நிலையற்றது என்பது உறுதியாகக் கூறப்படுகிறது.

நாம் பரலோகத்தை மறந்து பூமிதான் வாழ்வதற்கு நல்ல இடம் என்று நினைக்கிறோம். நமது மனநிலையானது "இதை சொந்தமாக்கிக்கொண்டு, எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அவ்வளவாக பயன்படுத்துவோம்" என்பதாகும். ஆனால் அப்.யோவான் "நாம் உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூரக்கூடாது; ஏனெனில் உலகத்தை நேசிக்கிறவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை" என்கிறார்.

### ஏன் கிறிஸ்தவர்கள் உலகத்தை நேசிக்கக்கூடாது

**1. நமது இறுதி இலக்கு இவ்வுலகமல்ல:** பிலி.3:20-ல் 'நமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது' என்று படிக்கிறோம். நாம் பிற நாடுகளுக்குச் சென்றிருக்கலாம். ஆனால் அவை எவ்வளவு அழகாக இருந்தாலும் அவை நமது சொந்த நாடல்ல. நாம் நமது நித்திய வீட்டுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

**2. நமது இறுதி இலக்கிற்கு இந்த வாழ்வு ஒரு பிரயாணம் மட்டுமே:** முற்கால விசுவாசிகள் வழியைப் பின்பற்றுகிற வர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் இந்த வழி உலகத்தின் வழி யாகச் சென்றாலும் இந்த உலகத்திற்கு நடத்துவதில்லை என்று அறிந்திருந்தனர். "ஆகையால் ..... பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு..... இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக் கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபி.12:1.

**3. நமது இறுதி இலக்கிலிருந்து நம்மை விலக்க உலகம் முயலுகிறது:** தேமாவைக் குறித்து புதிய ஏற்பாட்டில் படிக்கிறோம். அவன் பவுலின் ஊழியத்தால் மனந்திரும்பிய கிறிஸ்தவன். அவரோடு பிரயாணங்களில் துணையாயிருந்தவன். ஆயினும் 2 தீமோ.4:10-ல் பவுல் அவனைக் குறித்து, "தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து என்னை விட்டுப் பிரிந்து தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்". உலக சிநேகம் நம்மை நமது நோக்கத்தைத் தவறச் செய்கிறது.

**4. உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது:** சாத்தானைக் குறித்து இயேசு "இந்த உலகத்தின் அதிபதி" என்று யோவா.14:30-ல் குறிப்பிட்டுள்ளார். பவுல் "இவ்வுலக வழக்கத்திற்கேற்ற படியாகவும், ஆகாயத்து அதிகாரப் பிரபு வாகிய ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்கள்" என்று எபேசி.2:2-லும் குறிப்பிடுகிறார். நாமோ நம்மை தந்திரசாலியின் கையி லிருந்து நம்மை விடுவிக்க வேண்டும்

**5. உலகம் கடந்து செல்கிறது; நாமோ என்றென்றும் வாழவேண்டியவர்கள்:** "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" 1 யோவா.2:17. சில

(4-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.
**Mobile:** 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com

*அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை*
*மாலை 02.00 முதல் 6.00 வரை*
*(ஞாயிறு விடுமுறை)*


## இம்மாத பொன்னான சிந்தனை

**மலைபோன்ற** கஷ்டங்களே நம்மைக் கிருபாசனத்தண்டைக்கு ஓடச்செய்து **மழைபோன்ற** ஆசீர்வாதங்களைச் கொண்டுவரச் செய்கின்றன.

## வாக்குத்தத்தம்

இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்

எரேமியா 33:6

## சென்னை போதகர்களுக்கு எனது அன்பின் கடிதம்

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,*

*நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

*சுமார் 28 ஆண்டுகள் சுவிசேஷகர்* **ஜாண் ராஜமணி** *என்பவர், கன்னியாகுமரியில் கடற்கரைக்கு மிக அருகிலுள்ள* C.S.I.*ஆலயத்தில் வைத்து, வருடத்திற்கு ஒருமுறை, முதல் வெள்ளிக்கிழமை* (First Friday) *எழுப்புதலுக்காக ஒரு உபவாச ஜெபத்தை நடத்தி வந்தார். 28 ஆண்டுகளும் அடிமை அந்த உபவாச ஜெபத்தை நடத்த அழைக்கப்பட்டேன்.*

*இந்நிலையில், கன்னியாகுமரி உபவாச ஜெபத்திற்காக தினந்தோறும் ஜெபியுங்கள் என்று கர்த்தர் சொன்னார். எனவே ஒவ்வொரு நாளும் ஞாயிறு தவிர பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை உணவுக்கான இடைவேளையில் நாங்கள் ஒரு சிலராக கூடி ஜெபித்தோம்.*

*2012-ம் ஆண்டு உபவாச ஜெபத்தின் முடிவில், கன்னியாகுமரியில் நடத்தினது போதும் என்ற உணர்வை தேவன் தந்தார். எனவே, 2013-ம் ஆண்டு தூத்துக்குடி இயேசு நம்மோடு சபையிலும், 2014-ம் ஆண்டு பாளையங்கோட்டை காது கேளாதோர் பள்ளியிலும், 2015-ம் ஆண்டு சிவகாசி ஷெக்கைனா* A.G. *சபையிலும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார்.*

*2016-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த கர்த்தர் சொன்னார். எனவே, கர்த்தருடைய சித்தப்படி கீழ்க்காணும் இடங்களில் உபவாச ஜெபங்களை நடத்தினோம்.*

### எழுப்புதலுக்காக இதய கதறல் 2016

| | |
|---|---|
| ஜனவரி | A.G. சபை, திருவாடனை, இராமநாதபுரம் |
| பெப்ரவரி | NIMS ஆலயம், சுந்தரபாண்டியம், விருதுநகர் |
| மார்ச் | பெத்தேல் ஜெபவீடு, காட்டாத்துறை, குமரி மாவட்டம் |
| ஏப்ரல் | ஸ்பிக் நகர் A.G. சபை, தூத்துக்குடி |
| மேய் | சிமிர்னா A.G. சபை, வண்ணார்பேட்டை, நெல்லை |
| ஜூன் | I.P.C. கீழகுமரேசபுரம், திருச்சி |
| ஜூலை | அழைப்பின் எதிரொலி தேவ சபை, சென்னை |
| ஆகஸ்ட் | கர்மேல் பர்வதம் ஜெப கூடாரம், அருப்புக்கோட்டை |
| செப்டம்பர் | தேவராஜ்ய மகிமை ஜெபவீடு, ஆற்றூர் |
| அக்டோபர் | ஓரேப் ஊழியங்கள், விருகம்பாக்கம் |
| நவம்பர் | Ist அசெம்பிளி ஆப் காட் சபை, மதுரை |
| டிசம்பர் | புதுவாழ்வு சபை, ஆசாரிபள்ளம், நாகர்கோவில் |

### எழுப்புதலுக்காக இதய கதறல் 2017

| | |
|---|---|
| ஜனவரி | இயேசு நம்மோடு திருச்சபை, இராஜபாளையம் |
| பெப்ரவரி | CCEF ஆராதனை ஸ்தலம், சேலம் |
| மார்ச் | விசுவாசிகளின் ஐக்கிய சபை, ஒட்டன்சத்திரம் |
| ஏப்ரல் | ஏரல் வட்டார எழுப்புதல் ஜெப ஐக்கியம், ஏரல் |
| மேய் | புதுவாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை, காரைக்கால் |
| ஜூன் | True Life Mission, Nagercoil |
| ஜூலை | A.G. சபை, கிருஷ்ணன்கோவில், விருதுநகர் |
| ஆகஸ்ட் | A.G. சபை, மணலி, சென்னை |
| செப்டம்பர் | இயேசு நம்மோடு சபை, கருங்கள், குமரி மாவட்டம் |
| அக்டோபர் | மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி |
| நவம்பர் | C.S.I. சபை, காந்திநகர், திருநெல்வேலி |
| டிசம்பர் | I.P.C. சபை, மார்த்தாண்டம் |

** 2018-ம் ஆண்டு முதல் வெளிமாநிலங்களுக்கும் போக வழிநடத்தப்பட்டோம்.*

### எழுப்புதலுக்காக இதய கதறல் 2018

| | |
|---|---|
| ஜனவரி | E.W.M. Prayer House, புதுக்கோட்டை |
| பெப்ரவரி | சிற்றி A.G. சபை, கோயம்பத்தூர் |
| மார்ச் | A.G. சபை, பாண்டிச்சேரி* |
| ஏப்ரல் | தமிழ் மெதடிஸ்ட் சபை, மும்பை* |
| மேய் | கிரேஸ் A.G. சபை, தஞ்சாவூர் |
| ஜூன் | ICRM Central Church, மைசூர்* |
| ஜூலை | கன்மலை ஆராதனை சபை, கடலூர் |
| ஆகஸ்ட் | Faith Prayer House, கள்ளக்குறிச்சி |
| செப்டம்பர் | A.G. சபை, தேனி |
| அக்டோபர் | Shiloh Evangelical Mission, அந்தமான்* |
| நவம்பர் | பிலதெல்பியா சபை, கோயம்பத்தூர் |
| டிசம்பர் | விக்டரி A.G. சபை, வடக்கன்குளம் |

### எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

| | |
|---|---|
| ஜனவரி | C.S.I. கிரைஸ்ட் சர்ச், தெற்கு தாமரைகுளம், குமரி மாவட்டம் |
| பெப்ரவரி | El-Shaddai Church, New Delhi* |
| மார்ச் | பெதஸ்தா மறுரூபத் திருச்சபை, கல்பாக்கம் |
| ஏப்ரல் | Methodist Tamil Church, Mumbai* |
| மேய் | திருப்பூர் சிட்டி A.G. திருச்சபை, திருப்பூர் |

*2020-ம் ஆண்டு முழுவதும் சென்னையிலுள்ள சபைகளில் நடத்த ஏவப்படுகிறேன் நியாயாதிபதி 13:25. எனவே உங்கள் சபை கட்டிடத்தை ஒரே ஒரு விசை எழுப்புதலுக்காக இதய கதறல் 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள் என அன்பாய் கேட்கிறேன்.*

It is my calling and anointing. *இது அடிமையின் அழைப்பும் அபிஷேகமும் ஆகும்.*

*தொடர்புக்கு :* ***94897 40295***

**வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம். ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.**

**வங்கி கணக்கு :**

**பத்திரிகை :** **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

**உபவாச ஜெபம் :** **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA0000063

**முன்னேற்றப்பணி :** **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182

## எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
## Heart cry for Revival Chennai 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 18.01.2020<br>3-வது சனி | Elohim Apostolic Church<br>Pudichur, Chennai |
| பெப்ரவரி | | |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜூன் | | |
| ஜூலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | | |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

### எங்கள் தரிசனம்

*நரகத்தின் அகோர தரிசனத்தை பாவிகள் காணவேண்டுமென்று மீண்டும் மீண்டும் நாம் ஜெபிப்பது முற்றிலும் தவறு. மாறாக பாவிக்குத் தேவையானது கல்வாரி தரிசனமே; பாடுபடும் இரட்சகர் கனிவுடன் அவனை மனந்திரும்ப அழைக்கும் தரிசனமே அவனுக்குத் தேவை. கல்வாரிக்குப் பிறகு அவன் ஏன் அழியவேண்டும்?*

*24 மணி நேரம் நரகத்திற்கு மேல் தொங்கிக்கொண்டு அதன் நித்திய வேதனையைக் காணுவதற்குத் தன் இரட்சண்ய சேனை (Salvation Army) வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமானால், தான் நிச்சயம் அவ்விதம் பயிற்சி கொடுத்தே தீருவேன் என்று இரட்சண்ய சேனையின்* **வில்லியம் பூத்** *கூறுவாராம்.*

*நரகத்தின் காட்சியை ஒரு நொடி பார்த்துவிட்டால் நாம் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக கதறாமல் இருக்க முடியாது.*

### ஒரு நாத்திகனின் மரண மொழி

*“அவியாத அக்கினியின் உபாதையை ஆயிரம் ஆண்டுகள் அனுபவித்தாவது ஆண்டவரின் கிருபையைப் பெற்று அவரண்டைத் திரும்பக் கூடுமானால் நலமாயிருக்குமே. ஆனால் அது வீண் நம்பிக்கை. கோடாகோடி ஆண்டுகளும் என் வேதனைக்கு முடிவுண்டாக்காதே. நித்தியமே, ஆ நித்தியமே, நரகத்தின் தாங்கமுடியாத வேதனைக்கு முடிவேயில்லையே” - சர் பிரான்சிஸ் நியுபோர்ட்*

*ஜான் நாக்ஸ் என்பவர் இவ்வாறு ஜெபித்தார்:*

**ஆண்டவரே, ஸ்காட்லாந்தை எனக்கு தாரும்;**
**இல்லாவிட்டால் நான் மரிக்கட்டும்**

LORD, give me Scotland else I die

*என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? எஸ்தர் 8:6.*

For how can I endure to see the evil that shall come unto my people? or how can I endure to see the destruction of my Kindred?

*****

*தேவனுடைய பிள்ளைகள் அதிக அன்புடன் அனுப்பிய அனைத்து காணிக்கைகளும் கிடைத்தது. தேவன் உங்களை, உறவினரை, ஊழியத்தை, உத்தியோகங்களை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன். ஒவ்வொரு மாதமும் பத்திரிகை காலதாமத மாய் அனுப்பப்படுவதால், இந்த இதழை* **ஆகஸ்ட்** *என அச்சிடுகிறேன்.*

*ஆண்டவருடைய கிருபையால், ஜூன் மாத இறுதியை விட ஜூலை மாத ஆரம்பத்தில் அதிக ஆரோக்கியமாய் இருக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் பாஸ்டர்* **S. சாம் செல்வராஜ்** *அவர்கள் ஆகஸ்ட் 9, 10, 11 தேதிகளில் சென்னையில் நடத்தும் “அழைப்பின் எதிரொலி” பொன்விழா கூட்டங்களில் கலந்துகொள்வேன்.*

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*
*தேவ கிருபை உங்களோடிருப்பதாக.*

*உங்கள் சகோதரன்,*
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

## என் பரலோக நண்பர்
## *My heavenly friend*

George Muller

*ஆண்டவராகிய இயேசு நமது நண்பர். இதை நாம் அறிய நாடுவது அவசியம். இது ஒரு மார்க்க சம்பந்தமான கூற்று அல்ல. உண்மையாகவே அவர் நமது நண்பர். அவர் இக்கட்டு நாட்களுக்காகப் பிறந்த சகோதரர். நீதி.17:17;18:24-ன் படி சகோதரனைக் காட்டிலும் சொந்தமானவர். நம்மை ஒருபோதும் விட்டு விலகவோ கைவிடவோமாட்டார்.*

*உலகில் வாழும் நமக்கு ஒரு பரலோக நண்பர் இருப்பது விலையேறப்பெற்றது. அது ஓரளவு பரலோக சந்தோஷத்தை நமது இருதயங்களுக்குக் கொண்டுவருகிறது. தமது பிள்ளைகள் இவ்வுலகில் வாழும்போது சந்தோஷமாயிருப்பதை விரும்புகிறார். முற்றிலும் அழகான ஆண்டவர் நேரத்திற்கு நேரம், இரவும் பகலும் தம்மை நமது நண்பராக நிரூபிக்க விரும்புகிறார்.*

*இரவு தூக்கம் வரவில்லையா, ‘எனது பரம நண்பரே எனக்கு சிறிது நித்திரையைத் தருவீரா?’ என்று கேளுங்கள். வேதனையின் நடுவில் ‘எனது பரம நண்பரே, இந்த வேதனையை மாற்றுவீரா?’ என கேளுங்கள். இல்லையென்றால் ‘இது தொடருமானால் இதை சகிக்க எனக்கு பெலன் தாரும்’ என்று கேளுங்கள். தனியாகவும் களைப்பாகவும் இருக்கும்போது அவரிடம் திரும்புங்கள். அவர் உங்கள் தனிமையில் ஏற்ற நண்பராயிருப்பார்.*

*அறுபத்தி இரண்டு ஆண்டுகள் எனக்கு ஒரு அன்பான மனைவி இருந்தாள். இந்த தொண்ணூற்று இரண்டாம் வயதில் நான் தனியாயிருக்கிறேன். ஆனால் எனது அறையில் நான் அங்கும் இங்கும் நடக்கும்போது “என் அன்பு ஆண்டவராகிய இயேசுவே நான் தனியானவன்; ஆயினும் நான் தனியனல்ல, நீர் என்னோடிருக்கிறீர். நீர் என் நண்பர், என்னைத் தேற்றும், என்னை பலப்படுத்தும். எனக்குத் தேவையென்று நீர் காண்கிற எல்லாவற்றையும் உமது ஏழை பணியாளனுக்குத் தாரும்” என்று ஜெபிக்கிறேன். இது ஒரு கட்டுக்கதையல்ல. உண்மை அனுபவம். ஆண்டவராகிய இயேசு நமது நண்பர்.*

*இந்த அனுபவத்திற்குள் வரும்வரை நாம் திருப்தியுடன் இருக்கவேண்டாம். இதை சிந்தியுங்கள். அவர் வழக்கமாகவே நம்மை விட்டு விலகாமலும் கைவிடாமலும் எல்லாக் காலத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும் அதை நிரூபிக்கிற நண்பராயிருக்கிறார்.*

*இவ்வாறு அவர் சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் மட்டும் இருப்பவரல்ல. நமது வாழ்க்கை பயணம் முடியு மட்டும் நம்மோடு இருப்பவர். “நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்” சங்.23:4. இது தாவீதின் விலையேறப்பெற்ற அனுபவம்.*

*இத்தகைய நண்பர் விரைவில் வரப்போகிறார். அப்போது அவரோடு நாம் எடுத்துக்கொள்ளப்பட்டு என்றென்றும் அவரோடு வாழுவோம். அந்த மகிமையான எண்ணம் எவ்வளவு சிறந்தது!. எனவே நாம், “அவர் என்னை சேர்த்துக் கொள்ள வருகிறார். நானோ ஏழை குற்றமுள்ளவனும், தகுதியற்றவனும், நரகத்திற்குப் பாத்திரவானுமாயிருக்கிறேன். அவர் என்னைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ள வருகிறார்” என்று நமக்குள்ளே சொல்வோம்.*

*இதை எந்த அளவாக ஏற்றுக்கொள்கிறோமோ அந்த அளவாக பரலோக சந்தோஷம் நம்மை நிரப்பும்.*

*****

(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆண்டுகளுக்கு முன் என் தந்தை மரித்தார். சில மாதங்களாக எனது தாயார் படுக்கையிலிருக்கிறார்கள். இதுவரை அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் இன்று பயனற்றுக் கிடக்கின்றன. இவ்வுலகிலுள்ள பொருட்களெல்லாம் நிலையற்றவை என்ற பாரத்தோடு அப்பொருட்களின் மத்தியிலிருக்கிறேன். நிலையானவைகளையே நாம் நாட வேண்டும்.

உலகத்திலும் அதிலுள்ளவைகளிலும் அன்புகூரவேண்டாம். “நீங்கள் கிறிஸ்துவுடனே கூட எழுந்ததுண்டானால் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்; பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளை நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்” கொலோ.*3:1-4.*

முக்கியமான காரியங்களுக்காக மட்டும் சமயம், சக்தி, பணம் ஆகியவற்றை செலவு பண்ணுவோம். கிறிஸ்து நமது ஜீவனானால் உலகத்தை நேசிப்பது ஒரு பிரச்சனையல்ல. இயேசுவை அதிகமதிகமாக நெருங்கும்போது உலகத்தை ஜெயிக்கலாம். உலகத்திற்கு சற்றும் இடமளிக்காமல் இயேசுவின் மேல் முழுமையான அன்பு வைக்கவேண்டும். இயேசுவின் மேலுள்ள அன்பினால் இவ்வுலகில் முன்னேறலாம். அவரது அன்பு நம்மை நிரப்பும்போது பிறருக்காக கரிசனை கொள்ளவும், அவரது பணியைச் செய்யவும் அது ஏதுவாயிருக்கும்.

# இவ்வுலகில் ஒரு ஒளியாயிருக்க நாடுவோம்

***Seek to be a light in the world***

J.C. Ryle

“இரவு சென்று போயிற்று , பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்” ரோமர்.*13:12.*

‘இரவு சென்று போயிற்று’ இந்த வார்த்தை அனேகருக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். நிகழ்காலம் தான் ‘இரவு’ என்று அழைக்கப்பட வேண்டும் என நினைக்கின்றனர். அவர்கள் வாழுகிற காலம், அறிவியல், நாகரீகம், பொருளாதாரம், சுயாதீனம் மற்றும் அறிவு பெருத்த காலமாயிருக்கிறது. தேவனுக்குரிய காரியங்களில் உலகம் இன்னும் இரவு காலமாகவே இருக்கிறது. நமது பூமி சூரியனைச் சுற்றி வருகையில் தேவன் இதனைப் பார்த்து, ‘அதிக இருளாயிருக்கிறது’ என்கிறார். தூதர்களும் முன்னும் பின்னுமாக நடந்து நமது உலகைப் பார்த்து தொடர்ந்து இங்கு காண்பவையெல்லாம் ‘அதிக இருட்டாயிருக்கிறது’ என அறிக்கையிடுகின்றனர். ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசமுள்ள அனைவரும் இந்த விஷயத்தில் ஒரே மனதுடன் காணப்படுகின்றனர். அவற்றைச் சுற்றிலும் அவர்கள் காணும் வெறுப்பூட்டும் செயல்கள் எல்லாவற்றையும் கண்டு பெருமூச்சுவிட்டுக் கதறுகின்றனர். ஏனெனில் அவர்களுக்கு இவ்வுலகம் ‘அதிக இருட்டாகத்’ தென்படுகிறது.

உலகின் பெரும்பான்மையினரும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் எதிரான புரட்சியாளர்களாயிருக்கின்றனர். இவ்வுலகில் வாழும் திரள் கூட்டமானவர்கள் வேதபுத்தகமோ, சுவிசேஷமோ, அறிவோ, விசுவாசமோ மற்றும் நம்பிக்கையோ இல்லாமல் வாழ்கின்றனர்.

அனேக பேர்க்கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் ஆரோக்கியமற்றிருக்கின்றனர். அவர்களது மார்க்கம் வேதவசன ஆதாரமற்றது. வேதபுத்தகத்தில் காணப்படாத அனேக காரியங்களை அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் வேதவசனம் கூறும் திட்டமான கட்டளைகளை விட்டுவிட்டனர். கோடிக்கணக்கானோர் வேதவசனத்தை அறியாதவர்களும் சுவிசேஷத்தில் கூறப்படும் இரட்சிப்பைக் குறித்த எளிய கருத்துக்களைக் கூட அறியாதவர்களுமாயிருக்கின்றனர். எனவே நிச்சயமாகவே இது இரவு காலம் என்பதற்கு சந்தேகமில்லை.

### அந்தகாரத்தின் கிரியைகளை விட்டுவிடுங்கள்

எனவே “அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு ஒளியில் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்”. அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிடுவது எப்படி? கிறிஸ்துவை வெளிப்படுத்தும் ஒளியை வெளிக்காட்டாத உங்கள் வாழ்விலுள்ள அனைத்துப் பழக்க வழக்கங்களையும் ஒதுக்கிவிட வேண்டும். இயேசு மறுபடியும் வரும் போது நம்மில் காணப்படக்கூடாத எதையும் செய்யவே கூடாது என்ற திட்டமான உறுதிவேண்டும். அனுதினமும் அவரால் நியாயந்தீர்க்கப்படக் கூடாத நிலையிலும், குற்றப்படுத்தப் படக் கூடாத நிலையிலும் நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உள்ளான மனிதனைத் தரித்துக் கொள்ள வேண்டும். அந்தகாரத்துக்குரிய செயல்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு ஒவ்வொரு நிமிடமும் பகலுக்குரிய ஒளியுடன் நடக்க வேண்டும். கேள்விக்குரியதொன்றையும் நடப்பிக்க வேண்டாம். அனைத்து விக்கிரகங்களையும் உடைத்து எறிய வேண்டும். அவர் வரும்போது வெட்கப்படலாகாது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் அடிப்படையில் காலத்தை பயன்படுத்த வேண்டும். பொழுது போக்குகள், வாசிக்கும் புத்தகங்கள், நண்பர்கள், சம்பாஷணைகள் யாவும் அளவிடப்பட்டவைகளாயிருக்க வேண்டும். இரவு சென்று போயிற்று, பகலும் சமீபமாயிற்று. நான் இரவுக்குரியவனா அல்லது பகலுக்காகக் காத்திருக்கிறேனா? சிந்தித்து செயல்படுங்கள்.

### ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வோம்

ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்வது எப்படி? கிறிஸ்துவில் விசுவாசமுள்ள ஒருவனுக்கு அருளப்படும் கிருபையையும் பழக்கவழக்கத்தையும் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

உங்கள் இருதயங்களில் தொடர்ந்து வெளிச்சம் இருக்க வேண்டும். கிறிஸ்து நம்மில் வாழுகிற படியால் உங்கள் ஆத்துமாவால் அது உணரப் படவும், அறியப்படவும், அனுபவ மாக்கப்படவும் வேண்டும்.

உங்கள் வாழ்வில் வெளிச்சம் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டும். கிறிஸ்து பிரதிபலிக்கப்பட்டு, பின்பற்றப்பட்டு, அவரைப் போல வாழ வேண்டும். ஒரு பிரகாசமான ஒளியாக உலகில் வாழ வேண்டும். அதன் ஒளி தெளிவானதாகவும், அதிகதூரம் மக்களால் பார்க்கக்கூடியதாகவுமிருக்க வேண்டும். இப்படிச் செய்து ஒளியைத் தரித்துக்கொள்ளலாம்.

கிறிஸ்து எப்போது வந்தாலும் அதற்கு ஆயத்தமாக வாழவேண்டும். எதைச் செய்தாலும் இதுவே கடைசியாயிருக்கலாம் என்ற எண்ணமிருக்கட்டும். வேத வசனத்தை வாசிக்கும் போது இனி வாசிக்கும் வாய்ப்பு கிடைக்குமோ என்ற எண்ணத்துடன் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள். ஜெபிக்கும்போதும் இதுவே உங்கள் கடைசி ஜெபமாயிருக்கலாம் என்ற சிந்தையுடன் ஜெபியுங்கள். ஒரு பிரசங்கத்தைக் கேட்கும் போது இதுவே கேட்கும் கடைசித் தருணம் என்ற உணர்வு இருக்கட்டும். இதுவே நாம் ஆயத்தமாயிருப்பதற்கான வழி.

‘இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று’ இந்த வார்த்தைகளை விசுவாசித்து வாழுகிறவர்களைப் போல உலகம் உங்களைக் காணட்டும். பரம வீட்டை நெருங்கும்தோறும் அதிக விழிப்புடனிருக்க வேண்டும். ஆண்டவரது வருகை சீக்கிரமாயிருப்பதால் உத்தம கிறிஸ்தவ வாழ்வு நம்மில் காணப்படட்டும்.

லே ரிச்மாண்ட் தனது மரணப் படுக்கையில் ‘நாம் அரை விழிப்புடனிருக்கிறோம், நாம் அரை விழிப்புடனிருக்கிறோம்!’ என்றாராம். நாம் தூக்க மயக்கமான கண்களைத் தடவிவிட்டு நமது உள்ளம் அவரது விரைவான வருகையை எதிர்கொள்ள ஆயத்தமடையட்டும். நமது இருதயம் தூண்டி எழுப்பப்படட்டும். ‘எஜமான் சீக்கிரமாக வந்துவிடுவார்’ என்ற எண்ணத்துடன் செயல்படுவோம். சோம்பலை விட்டுவிடுவோம். உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரராய் செயல்படுவோம்.

### நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

# உலகத்தின் வேதபுத்தகம்

## *The world's Bible*

J. Harold Smith (1910 - 2001)

கிறிஸ்தவன் உலகத்தால் வாசிக்கப் படும் வேதபுஸ்தகம். நமது வாழ்வு உலகத்திற்கு வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. ஒருவர் வேத புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது அனேகர் நமது வாழ்வைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். உலக மக்கள் குளிர்ந்ததும், இதயமற்றதுமான இறையியலைப் பேசலாம். அவர்கள் சத்தியத்தை மறுதலிக்கலாம். ஆனால் 'வாழும் நிருபங்களாகிய' தேவ பயமுள்ள வாழ்க்கைக்கு எதிர்த்துப் பேசமுடியாது.

"எங்கள் இருதயங்களில் எழுதப் பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே" 2 கொரி.3:2. தொடர்ந்து அடுத்த வசனத்தில் "நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது" என்று பவுல் குறிப்பிடுகிறார்.

நிருபம் என்பது கடிதம். அப். பவுலின் அபிப்பிராயப்படி ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் புது வாழ்வில் சுவிசேஷத்தின் சத்தியம், வல்லமை ஆகிய வற்றிற்குப் புதிய வெளிப்படுத்தலாயிருக்கிறான். அதாவது அவன் கிறிஸ்துவுக்கு சாட்சி பகர உலகத்துக்கு அனுப்பப் பட்டவனாயிருக்கிறான்.

கிறிஸ்தவத்தின் சத்தியத்தின் மிக உறுதியான விவாதம் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்வு என்றால் தவறாகாது. அற்புதங்களில் மனிதர் நம்பிக்கை வைக்கும்படியான நல்ல முயற்சி நமது வாழ்வில் நாம் மறுபிறப்பின் அதிசயத்தைக் காண்பிப்பதாகும். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான மிக நல்ல நிரூபணம் கிறிஸ்தவன் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வாழ்வைக் காண்பிப்பதாகும்.

### கிறிஸ்துவைப் போல வாழுதல்

மறுபிறப்படைந்த வாழ்விலிருந்து பிரகாசிக்கும் அன்பு வெளிப்படுகிறது. இந்த நிருபம் எல்லா மனிதராலும் அறியப்பட்டு வாசிக்கப்படுகிறது. இது காணப்படும் ஒரு வலிமை. இப்பாவ உலகில் அது உருவாக்கிய பலன்கள் மூலம் புலப்படும் வல்லமை.

நமக்கு அளிக்கப்பட்ட தூய ஆவியால் நமது இருதயங்களில் ஊற்றப் பட்ட தேவ அன்பு கடந்த கால சரித்திரத்தின் அனைத்துப் பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. அது கிறிஸ்தவனின் வாழ்வில் உள்ளடங்கியிருப்பதால் அது மறைக்கப்பட முடியாது. இந்த அன்பின் கிறிஸ்து அப்போஸ்தலனாகிய பவுலை நெருக்கி ஏவியதால் அவர் அர்ப்பணத் தோடும், தியாகத்தோடும், பாடுகளோடும் வாழ முடிந்தது.

### எந்த வகையான 'வேதபுத்தகத்தை' உலகம் நம்மில் வாசிக்கிறது?

'ஜீவனுள்ள நிருபங்கள்' என்பதற்கு மொழியாக்கம் தேவையில்லை. இதன் வழியாக உலகமெங்குமுள்ள சாதாரண மக்களின் காதுகளில் ஒரு தாழ்மையுள்ள, தூய, சாதுவான கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கைப் பிரசங்கிக்க முடியும். இரட்சிப்பு, சுத்திகரிப்பு, பிரித்தெடுக்கப்படுதல், சேவை ஆகியவை திறமையான ஒரு பேச்சாளரால் விவரிக்கப்படுவதைவிட தேவனுடன் வாழும் எளிமையான தூய கிறிஸ்தவ வாழ்வு பயனுடையதாயிருக்கும். கடுதாசிகளில் விவரிக்கப்படும் எந்த விளக்கத்தைவிடவும் ஜீவிக்கும் நிருபம் அதிகமாக வாசிக்கப்படுகிறது.

சுயநலமற்ற கிறிஸ்தவனின் வாழ்வு மறைத்து வைக்கப்படமுடியாது. இதற்கு விளம்பரங்கள் தேவையில்லை. பேதுருவும் யோவானும் தங்கள் நிருபங்களை எழுதுவதற்கு முன்பாகவே 'அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்' அப்.4:13 என்று பார்க்கிறோம். சத்தியத்திற்குக் கண்களை மூடிக் கொள்ள முடியாது. அவர்கள் கிறிஸ்துவின் நிருபங்கள் என்பதை பரிசேயரும் சதுசேயரும் வாசிக்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எதிரிகள் இதற்கு எதிராக வாயடைத்துப் போனார்கள்.

இந்த அப்போஸ்தலரைப் போல நாமும் வாழ்ந்தால் நம்மையும் சமுதாய, அரசியல் மற்றும் வியாபார தொடர்புகளில் சந்திப்பவர்கள் நிச்சயமாக சுவிசேஷத்தின் நம்பிக்கை வல்லமை ஆகிய வற்றை நம்மில் காண்பார்கள். அவை கல்லில் எழுதப்படாமல் இருதயத்தின் மாம்ச பலகைகளில் எழுதப் பட்டுள்ளது.

அன்பு நண்பர்களே எந்த விதமான வேதபுத்தகத்தை நீங்கள் என்னில் பார்க்கிறீர்கள்? அது அழுக்கு நிறைந்ததா? தவறுகளும் புரட்டுகளும் நிறைந்ததா? அல்லது மாய்மாலமானதா?

தேவனுடைய தூய வசனத்தின் சத்தியத்தை என் வாழ்வில் நீங்கள் பார்க்கவும், கேட்கவும் முடிகிறதா? தேவனுடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி என் வாழ்வு ஜீவிக்கிற நிருபமாயிருக்கிறதா?

இந்தக் கடைசி அந்தகார நாட்களில் நாம் மனிதரால் வாசிக்கப் படும் உத்தம நிருபங்களாயிருப்போம். பாவிகளுக்கு முன்பாக இடறல் உண்டாக்குகிறவர்களாயிராமல் மக்களைக் கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தும் நிருபங்களாயிருக்க தேவன் தாமே உதவி செய்வாராக.

# சபையின் முக்கிய வேறுபாடும் அதன் அழைப்பும்

## *The church's vital ditinction and calling*

Rich Carmicheal

சபை உலகத்தைவிட வேறு பட்டதாயிருந்து உலகத்தின் வெளிச்சமாகிய ஆண்டவரைப் போல சேவை செய்ய வேண்டும்.

"........ ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்ற வர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு...." பிலி.2:14, 15.

இயேசுவும் தாம் ஏறெடுத்த ஜெபத்திலே தமது ஜனங்களுக்கும், உலகத்துக்குமுள்ள வேறுபாட்டினை அழுத்தமாகக் கூறுகிறார் (யோவா. 17:14-19 படிக்க)

தனது ஆவிக்குரிய தனித்தன்மையை மறந்து சபை உலகத்தோடு சாயும்போது இரண்டு துக்கமான காரியங்கள் நிகழலாம். முதலாவது சபை தானே பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு, ஆண்டவரின் இருதய விருப்பத்திற்குத் தூரமாகிறது. தேவன் சபையின் மேல் பிரியமாயிருக்கிறார். அவர் "கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான, மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும், தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" எபே.5:27 சபையானது உலகத்தைப் போல் தோற்றமளிக்கவும், உலகத்தின் வழிகளில் நடக்கவும் ஆரம்பிக்கும்போது அதன் மகிமையும், ஆவிக்குரிய அழகும் நீங்கிப் போகின்றன. ஆண்டவரும் அதிகமாக துக்கமடைகிறார். "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்" எபே.1:4. அவர் விரும்புவது ஒரு தூய்மையும், பழுதற்றதுமான ஒரு மணவாட்டி.

இரண்டாவதாக சபை லௌகீக மடையும்போது ஆண்டவருக்காக உலகத்தை ஆதாயம் பண்ணும் தாக்கத்தை இழந்துவிடுகிறது. ஒளி தன் பிரகாசத்தையும் உப்பு தன் சாரத்தையும் இழந்துவிடுகிறது. "தன் பரம மணவாளனுக்கு உத்தமமாயிருக்கும் போது சபை தன்னை உலகத்தால் கறைப்படுத்தாததாகவும் ஆத்தும ஆதாயத்தில் திறமையுடையதும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாயுமிருக்கும். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்" என்ற அப்போஸ்தலர் கருத்தை மிகவும் கீழ்ப்படிதலோடு கைக்கொண்டாலும் உலகத்தை நேசித்து நன்மை செய்கிறதாயிருக்கும். நமது தனித்தன்மையை நாம் காத்துக் கொள்ளாவிட்டால், நமது பயன்படும் தன்மையை இழந்து போவோம்.

மாறாக அனேகர் உலகத்தைக் கவர்ந்து கொள்ள நாம் உலகத்தின் வேஷம் தரிக்கவேண்டும் என்கிறார்கள். இதில் வெற்றி கிடைப்பது போல் தோன்றினாலும் அது வெறும் தோற்றமே. அடால்ஃப் சஃபீர் என்பவர் சபையின் போக்கைக் குறித்து, "அது மேலாம்பரமான வெற்றியால் மயங்கி, தன்னை இத்தற்கால உலகத்தோடு இணைத்து, மரித்ததும், புதுப்பிக்கப் படாததுமான உயிரற்ற மக்களை

## Lizzie Johnson the suffering Saint

Bishop Frank W.Warne (1854-1932)

பேராயர் வார்னே தென்கிழக்கு ஆசியாவில் குறிப்பாக இந்தியாவில் 1900-களின் ஆரம்பத்தில் மெதடிஸ்டு மிஷனெறியாகப் பணிபுரிந்தவர். ஒரு முறை அவர் ஐக்கிய நாட்டிற்குத் திரும்பிச் சென்றபோது சந்தித்த ஒரு வித்தியாசமான பெண்மணியைக் குறித்து இங்கு படிக்கிறோம்.

நான் 1904-ல் சிக்காகோவில் நடந்த பொதுவான மாநாட்டிற்கு சென்றபோது சுமார் இருபது பேர் என்னிடம், "லிஸி ஜான்ஸனை சந்திக்காமல் நீங்கள் மறுபடியும் இந்தியா செல்லக்கூடாது" என்று கூறினர். எனக்கு அந்தப் பெண்மணியைத் தெரியாது. எனினும் அவர்களை சந்திக்க நான் தீர்மானித்தேன். அவர்கள் இல்லினாய்ஸ் நகரின் தென்பகுதியில் காசே என்ற இடத்தில் வசித்தார்கள். இரவு ரயிலைப் பிடித்து காலையில் ஒரு தோட்டத்தின் நடுவிலிருந்த அழகிய சிறு வீட்டை அடைந்தேன். இனிய முகத்துடன் ஒரு தாயார் வந்து கதவைத் திறந்தார்கள். நான் வந்த காரணத்தைக் கூறியபோது அவர்கள் என்னை வரவேற்பறையில் உட்காரவைத்து விட்டு உள்ளே சென்றார்கள். மறுபடியும் வந்து "லிஸி உங்களைப் பார்ப்பார்கள், நீங்கள் என் பின்னே வாருங்கள்" என்றார்கள்.

ஒரு சுத்தமான அறையில் குறைந்த அளவே ஒளி நுழையக்கூடிய அளவாக மிகக்கட்டியான திரைகள் போடப்பட்டிருந்தன. இதுவரை என் வாழ்வில் நான் கண்டிராத அளவிலான வேதனைகளுடன் படுக்கையிலிருந்த அவள் தனது கதையை என்னிடம் கூறினாள்.

அவள் 13 வயதாயிருக்கும் போதே மிஷனெறி பணிகளில் விருப்பமுடையவளாயிருந்தாள். வில்லியம் டெய்லர் என்ற மிஷனெறி 50 டாலர் கொடுத்தால் ஒரு ஆப்ரிக்க அடிமைப் பெண்ணை விடுவிக்கலாம் என அறிவித்ததை அவள் கேள்விப்பட்டிருந்தாள். எனவே 50 டாலர் சம்பாதித்து ஒரு பெண் பிள்ளையை விடுவிக்கத் தீர்மானித்தாள். சில நாட்களில் அவள் ஒரு வியாதியால் பாதிக்கப்பட்டாள். அவளது தண்டுவடத்தை சுற்றிலுமுள்ள எலும்புகள் மிருதுவாகிவிட்டன. இருபது வயதில் அவள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஆகிவிட்டாள். அவளது முதுகு வளைந்தால் உடனடி மரணம் ஏற்படும் என்ற நிலையில் படுக்கையிலானாள். மூன்று அங்குலத் திற்கு மேலாக தலையை உயர்த்தாமல் தலையணையில் தலை வைத்து வாழ்ந்து கொண்டிருந்தாள். அதோடு தொடர்ந்து அதிகமான வேதனையுமிருந்தது.

சுவிசேஷ பணிக்கு பொருள் ஈட்ட முடியாத அவள் ஒரு மெத்தை செய்து விற்க மனம் கொண்டாள். தந்தையிடம் தனது கைகளை வசதியாக வைத்து வேலை செய்யும்படியாக ஒரு மேசையைக் கட்டிலின் இருபுறமாக அமைத்துத் தரும்படி கேட்டாள். மிகுந்த வேதனையிலும் முயற்சியிலும் விடாது உழைத்து ஒரு மிக அழகிய மெத்தையை தயாரித்தாள்.

நான் அவளுடைய அறையில் சென்றபோது அந்தப் பணியை முடித்து 13 ஆண்டுகளாயிருந்தன. இவ்வருடங்களில் அவளது இருதய பாரத்தை உணர்ந்து அந்த மெத்தையை வாங்கி விற்க எவரும் முன்வரவில்லை. அந்த மெத்தையை அங்கு பார்த்த நான் சிறுபிள்ளையைப் போல அழுதேன்.

அதைக் கடனாக எடுத்துக் கொள்ளலாமா எனக் கேட்டு வாங்கினேன். நான் இந்தியா வர 3 வாரங்கள் மட்டுமே இருந்தன. நான் சென்ற இடங்களிலெல்லாம் (ரயில், உணவகம், தனியார் இல்லம், பொது மேடை) அதைக் கொண்டு சென்று அதனை எல்லோருக்கும் காண்பித்து அதன் கதையையும் கூறினேன். "லிஸி ஜாண்சன் மேலுள்ள உங்கள் அனுதாபத்தின் அடிப்படையில் இந்த மெத்தையில் ஏதாவது போடுங்கள்" என்று கூறினேன். நான் இந்தியா திரும்பு முன் 600 டாலர் சேகரித்து அனுப்பினேன். அது சுவிசேஷ பணிக்கு பயன்பட்டது.

தனது மெத்தை விற்கப்படவில்லை என்ற 13 ஆண்டுகளும் அவள் அர்ப்பணிப்பை விட்டுவிடவில்லை. அவள் இன்னொருவிதமாக பணம் சேர்க்க முயற்சி செய்தாள். அதன் மூலம் அவளது பெயர் பிரஸ்தாபமாகியது. அவள் வேத வசனங்களடங்கிய அச்சிடப்பட்ட ரிப்பன் புத்தக அடையாள அட்டைகளை தயாரித்து நண்பர்கள் மூலம் உலகமெங்கும் விற்பனை செய்தாள். படுக்கையில் முதுகை வைத்தபடியே சிறிய மேஜை மீது தனக்கு வந்த கடிதங்களுக்குப் பதில் எழுதினாள். புத்தக அடையாள அட்டைகளை 17 நாடுகளுக்கு மேல் அனுப்பியதாக அவள் குறிப்பிட்டாள். "நான் மிகவும் கடினமாக உழைத்தேன். எனது வேதனையின் படுக்கையில் இவ்வாறு செய்ய பெலப்படுத்தின தேவனைத் துதிக்கிறேன். நான் புத்தக அடையாள அட்டைகளை தயாரித்து விற்ற காசுகள் சுதேச ஊழியர்கள் அயல் நாடுகளில் பணிசெய்ய பயன்படுத்தப் படுகின்றன. இந்தப் பணி எனது பெலனுக்கு மிஞ்சியது. ஆயினும் ஆத்தும ஆதாயம் செய்யும் ஊழியர்களுக்காக இன்னும் அதிகமாக உழைக்க வாஞ்சிக்கிறேன்" என்று அவள் கூறினாள். அவள் மரிக்கு முன் மிஷன் தளங்களுக்காக 24,000 டாலர்கள் சேர்த்துக் கொடுத்தாள்.

அவளது கதையை மக்களின் தூண்டுதலுக்காக பயன்படுத்தி வருகிறேன். ஒரு சிறந்த பணிக்காக அவள் நிறைவேற்றிய செயல்களை சுகமும், பெலனும் ஆரோக்கியமுமுள்ள நம்மால் செய்ய முடிகிறதா? குறிப்பாக இதை வாசிக்கும் அல்லது கேட்கும் வாலிபர்கள் ஒரு பயனுள்ள வாழ்க்கை வாழ தீர்மானிப்பதை நான் எதிர்பார்க்கிறேன்.

"ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" அப்.9:6.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்துக்கொள்வதால் அங்கு கிறிஸ்துவின் அன்பு இல்லை" என்று குறிப்பிடுகிறார். சபை தனது சாட்சி தெளிவற்றதும், வாழ்வும் நடக்கையும், நிறமற்றதும், கட்டுப்பாடு தளர்ந்தது மாயிருப்பதால், மறுபிறப்படையாத மக்கள் தலையாகிய கிறிஸ்துவின் சரீரம் என்று தங்களை எண்ணிக்கொள்ள இடமளிக்க முடியாது. கிறிஸ்துவின் வல்லமைக்கும், கிருபைக்கும் தூரமான வர்கள் சபையின் வழிகாட்டுதலில் நடப்பதாக எண்ணக்கூடாது. அவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவின் பாரம்பரியத்தில் எந்தப் பங்குமில்லை.

எங்கள் நம்பிக்கையின்படி இந்த செய்திகள் மூலம் நாம் அழைக்கப்பட்டதும், பிரித்தெடுக்கப்பட்டதுமான நோக்கத்தை நிறைவேற்ற தேவனுக்குப் பிரியமானவர்களும் உலகத்துக்கு ஒளியாகவுமிருப்போம். நமது பணி கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்வதும் இழந்து போன ஆத்துமாக்களை இரட்சிக்க முயற்சிப்பதும் என்பதை மறக்க வேண்டாம். அதற்காக ஆவிக்குரிய சர்வாயுதங்களைத் தரித்துக் கொள்வோம். வேதவசனத்தை பயன் படுத்துவோம். தூய ஆவியானவரின் புதிதாக்கும் வல்லமையை பெறுவோம். அன்பினாலும் தூய வாழ்வாலும் மக்களை ஆண்டவரிடம் நடத்துவோம்.

## உலகம் நமது வீடல்ல
### The world is not our home

Adolph Saphir

இன்று உலகத்தை சாத்தான் ஆண்டுகொண்டிருக்கிறான். ஆனால் கிறிஸ்து நம்மை இந்தத் தீய உலகிலிருந்து விடுவித்திருக்கிறார். கிறிஸ்துவிலிருப்பது போன்ற சத்தியத்தை இவ்வுலகத்தின் ஞானம் அறிந்து கொள்ள முடியாது. நமது இரட்சகர் முன்கூட்டியே கூறியபடி உலகம் நம்மைப் பகைக்கும். நாம் எவ்வளவாகக் கிறிஸ்துவின் **சபையைக்** காண்பிக்கிறோமோ, எவ்வளவு நெருக்கமாக அவரோடு பழகுகிறோமோ, வார்த்தையிலும், உண்மையிலும் எவ்வளவாக சாட்சியாயிருக்கிறோமோ அதற்கேற்றபடி பகைமையும் துன்பமும் இவ்வுலகிலுண்டு. "நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதை சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாரா யிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது" யோவா.15:19.

பூமியின் தேசங்களிலிருந்து தேவன் ஜனங்களை தம்மைத் தெரிந்து கொண்டு சேவிக்கும்படி எழுப்புகிறார். சபை என்பது ஒரு தேர்தல். அதன் குணம் தெரிந்தெடுக்கப்பட்டது. ஆனால் அகில உலகம் சார்ந்ததல்ல. அது விதிவிலக்கானது. ஆனால் பொதுவானதல்ல. நாம் சிறுகூட்டமானவர்கள், பெரும்பான்மை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யானவர்களல்ல. நாம் அன்னியரும் பயணிகளுமாயிருக்கிறோம். எனவே நிலையானவர்களும் அதிகாரமுடையவர்களுமல்ல. ஆனால் மணவாளனாகிய ஆண்டவர் வரக் காத்திருக்கிறோம்.

நமது நம்பிக்கை கிறிஸ்துவின் வருகை. நாம் சமாதானமும் ஒளியும் நிறைந்த நாட்களுக்காக எதிர்பார்த்திருக்காமல் புயலும், கொடுங்காற்றும் நிறைந்த நாட்களை எதிர்பார்க்கிறோம். பாதுகாவலும், தெய்வபயமும், சத்தியமும் நிறைந்த நாட்களையல்ல ஆபத்தான நாட்களை நெருங்கி வருகிறோம். இக்காலம் லௌகீகம், தவறுகள் ஆகியவை வலுவடைந்து கவர்ச்சியுடையவைகளாகவும் தீவிரவாதம் நிறைந்ததாகவுமிருக்கும். சோதோம் கொமோராவின் அழிவுக்கு முன்பாக அங்கு காணப்பட்ட நிலை ஏற்படும். நியாயத்தீர்ப்பு வருமுன்னதாக தேவன் யூதரிலும், புறஜாதிகளிலுமிருந்து மக்களை சபையில் சேர்த்துக் கொள்வார். பிதாவின் சித்தப்படி அவர் தமது அரசை எடுத்துக்கொள்ள வருவார் என்பதே நமது நம்பிக்கை.

எனவே நமது ஆவல் அவருக்கு உத்தமமாகவும் உண்மையாகவும் இருப்பது மட்டுமே. சத்தியத்தைப் பூரணமாய் காத்துக் கொள்வதும், ஆவியின் அன்பிலே வாழ்வதும் இன்றியமையாதவை. உலகப் பொருட்களையும் உயர்வுகளையும் நாடாமல் இயேசுவையே நாட வேண்டும். அவரில் களிகூர்ந்து, பிதா அவரை வெளிப்படுத்தும் போது நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில் குமாரன் சுவிசேஷத்தையும் தெய்வீகக் கிருபையையும் கேட்கும்படி பாவிகளை இழுத்துக்கொள்வார்.

## வாலிப மக்களுக்கான ஒரு சவால்

### *A challenge to young people*

Lois J. Stucky

தேவனுக்கு முன்பாகத் தங்கள் வாழ்வை எப்படி செலவு பண்ண வேண்டுமென்பதைக் கவனமாக சிந்திக்கும்படி வாலிபர்களை சவாலாகக் கேட்கிறேன். இளம் நண்பர்களே 'ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் விரும்புகிறீர்?' என்ற முக்கிய கேள்விக்கு நல்ல பதில் தேவன் உங்களுக்கு தருவாராக.

பல ஆண்டுகளுக்கு முன் நான் வேத பாடசாலை மாணவியாக இருந்த போது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவுகளிலும் அங்கு ஒரு மிஷனெறி பேச்சாளர் வருவதுண்டு. அதன் மூலமாகவே மிஷனெறி பணிகளுக்கு என் இருதயம் திறக்கப்பட்டது. வாரந்தோறும் ஆராதனை முடிந்து எனது அறைக்குச் செல்வேன். அங்கு முழங்காற்படியிட்டு, "நான் இந்த சுவிசேஷப் பணியில் ஏதோ ஓரிடத்தில் பொருந்த வேண்டும். அந்த இடத்தை எனக்குக் காட்டுவீராக" என்று ஜெபிப்பேன். அதே வேளையில் "நீ ஒரு மிஷனெறி ஆக முடியுமா? நீ வீட்டை விட்டு 60 மைல்களுக்கப்பால் சென்றதில்லை. இப்போது கடல் கடந்து செல்வாயா? மக்கள் முன்னிலையில் பேசப் பயப்படும் நீ மிஷனெறி பேச்சாளராக முடியுமா?" என்ற கேள்விகள் எழும்பும். சாத்தான் இதற்கு உறுதுணையாயிருந்தான்.

ஆனாலும் தேவனுடைய சித்தத்தை அறிவதும் செய்வதும் எனக்குப் பெரிதாய்த் தோன்றியது. ஆனால் தேவனுடைய கிருபையாலும் பெலத்தாலும் சில ஆண்டுகள் நான் அவரை கடல் கடந்து சேவித்தேன். இன்னும் சில ஆண்டுகளில் ஆங்கில வருகையின் தூதன் ஊழியத்தில் என்னை இணைத்தார். இங்கு தேவநாமத்தை உயர்த்திக் காண்பிக்கவும், அனேக நாடுகளுக்கு அவருடைய இரண்டாம் வருகையை அறிவிக்கவும் தேவன் உதவி செய்கிறார்.

#### வாலிப இதயங்கள் தேவனுக்கு வேண்டும்

நாம் சுவிசேஷ விதையை வாலிப இதயங்களிலும், பிற மக்களுடைய வாழ்விலும் விதைக்கும்போது தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதை நாம் அறியோம். அன்பு வாலிபர்களே உங்கள் விலையேறப்பெற்ற வாழ்வை ஆண்டவருக்காக முதலீடு செய்யுங்கள். தயக்கம் வேண்டாம். நீங்கள் அதற்காக வருந்த வேண்டியது வராது.

பெற்றோரே, தேவனிடமுள்ள பொக்கிஷங்களை உங்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள அனுமதியுங்கள். அதற்கான கிரயம் அதிகமாயிருக்கலாம். கல்வாரியை நோக்கிப் பாருங்கள். தேவன் தமது குமாரனை (விலையேறப் பெற்ற) கொடுத்தாரே. உங்கள் வாலிபர் தேவனுக்குக் கீழ்ப்படியட்டும். முதிர்ச்சியடைந்த பெரியவர்களுடைய கரிசனை, ஜெபம் ஆகியவற்றால் தாங்கள் வாலிபத்தில் வழிதவறாமல் பாதுகாக்கப்பட்டோம் என்று அனேகர் சாட்சி கூறுவர். அப்படியானால் உங்கள் வாலிபர்களை நம்பகமான தேவனுடைய அன்பின் பராமரிப்புக்கு ஒப்புக்கொடுப்பதால் இவ்வுலகின் மாயைகள், தீமைகள் ஆகியவற்றி லிருந்து பாதுகாக்கக் கூடுமல்லவா!

தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குத் தடையாயிருப்பவைகளிலிருந்து பாதுகாக்க தேவன் நமக்கு ஞானம் தரவேண்டும். எல்லாம் அவர் கரத்திலிருக்கின்றன. நாம் திறமையற்றவர்களாயினும் அவர் நம்மை நடத்துவார். விசுவாச ஜெபத்தின் மூலம் நாம் பாதுகாக்கப்படுவோம்.

இதற்கு 'இரத்தமும், வியர்வையும்' கிரயமாகலாம். தேவன் விரும்புவதை செய்து முடிக்க மரணமும் சிலருடைய வாழ்வில் நிகழலாம். தேவன் நம்மிடம் கேட்கும் எதையும் கொடாமல் மறுக்க வேண்டாம். கீழ்ப்படியவும் எல்லாவற்றையும் அர்ப்பணிக்கவும் தேவ கிருபை வேண்டும். நாம் கேட்போமானால் அந்தக் கிருபையை அளிக்க அவர் விருப்பமுடையவராயிருக்கிறார்.

## இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் சுவிசேஷப் பணி

### *The mission to seek and save the lost*

Addph Saphil

சபை தன்னை உலகத்தால் கறைப்படுத்தாமல் கிருபையிலும், பரலோக தன்மையிலும் வளர ஆண்டவருடைய சிந்தையை பெறவேண்டும். ஆண்டவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் பிதாவினால் அனுப்பப்பட்டார். அவர் நன்மை செய்கிறவராக சுற்றி நடந்து தெய்வீக அன்பின் செய்தியை அனைவருக்கும், பரிசேயருக்கும், வேதபாரகருக்கும் அறிவித்தார். சபையோ அழியும் ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படவில்லை, அவரது அன்பால் நெருக்கப்படவுமில்லை. ஊழியம் செய்வதற்காக வந்த அவருடைய காலடிகளைப் பின் தொடரவுமில்லை. மாறாக லௌகீக தன்மையடைந்து, சுயநல ஆவியால் நிறைந்துவிட்டது. அவிசுவாசம் இருதயத்தில் நுழைந்து விட்டபடியால் அதன் வாழ்வே ஆபத்திலிருக்கிறது.

ஒளி மனிதருக்கு முன்பாகப் பிரகாசிக்காவிட்டால், அது சீக்கிரம் மறைந்துவிடும். உப்பு பயனளிக்காவிட்டால் உதவாமற்போய் கால்களால் மிதிக்கப்படும். தலைவனின் கட்டளைக்கு கீழ்ப்படியாதவன் கோழையாகவும் கீழ்த்தரமானவனாகவும் யுத்தத்தை விட்டு விலகி நிற்பான். அவனுக்கு வெற்றியால் வரும் பரிசிலும், சந்தோஷத்திலும் பங்கில்லை. அவன் தன்னை போர் வீரனாக அழைத்தவரின் பாராட்டையும் பெறுவதில்லை.

#### அதிக அளவிலான அன்பும் பக்தியும்

சபை சுறுசுறுப்பாயிருந்தபோது மிகுந்த ஜெபத்துடனும், அதிக அன்புடனும், நோக்கத்தில் உறுதியுடனும், பரம சிந்தையுடனும், ஆவிக்குரிய தன்மையுடனுமிருந்தது. இரக்கத்தில் களிகூர்ந்து தேவையுள்ளவர்களுக்கும், துக்கமுள்ளவர்களுக்கும் இரக்கம் காண்பித்து, அன்பின் வெற்றியுடன், அன்பினால் நெருக்கப்பட்டு இரட்சகருக்கு சாட்சியாயிருந்து அழியும் ஆடுகளை நல்ல மேய்ப்பருக்கு நேராக வழிநடத்தியது.

ஆழமான அன்பு, பக்தி ஆகியவையுடன் உத்தம விசாலமாக்கும் பணி ஆகியவை இணைந்து செல்கின்றன. செயல்பாடு அதன் தாக்கம், கடின உழைப்பு, உற்சாகம் ஆகியவை ஜெபம் அன்பு இல்லாமலே தோற்றமளிக்கலாம். பக்தி, ஆவிக்குரிய தன்மை, வாஞ்சை ஆகியவை அன்பான சேவை இரக்கமான செயல்கள் இல்லாமலே சிலவேளை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படலாம். ஆனால் உண்மையான ஒளி உள்ளே பிரகாசிக்கவும், உண்மையான அன்பு இருதயத்தில் வாசமாயிருக்கவும் செய்தால் பிதா இரகசியங்களை அறிகிறவராகவும், நற்கிரியைகளைக் காண்கிறவராகவுமிருக்கிறார். இரட்சிப்பின் சந்தோஷம் சபையை ஆளுகை செய்யும்போது பாவிகள் தேவனுடைய வழியை தெரிந்து கொள்ளவும் மீறுதல் செய்கிறவர்கள் மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**அதிக பரிசுத்தம் அதிக பெலனைத் தரும்**

அன்பினால் சபை உலகத்தை எதிர்க்க முடியும். அது உலகிலே சென்று வார்த்தையாலும் செயலாலும் நற்செய்தியை அறிவிக்க முடியும். இம் முயற்சியில் மிகப் பரிசுத்த வாழ்வு அதன் பெலன் அடங்கியிருக்கிறது. பரலோக மணவாளனுக்கு உத்தமமாயிருக்க சபை உலகத்தால் கறைபடாமலிருக்க வேண்டும். ஆத்தும ஆதாயத்தில் திறமையுடனிருக்க வேண்டும். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். தனது பரலோக நிலைப்பாட்டினையும், குணாதிசயத்தையும் நினைவு கூரும்போதுதான் சபை மேற்கொள்ள முடியும். நாம் புகழை விரும்பி உலக ஆவிக்கு இடங்கொடுத்தால் நமது ஒளி மங்கி உப்பு சாரமற்றுவிடும். கோலியாத்தோடே தாவீது சவுலின் யுத்த ஆடைகளுடன் போரிட முடியாது. நமது திருப்தி தேவனிலுள்ளது. நமது ஆயுதங்கள் ஆவிக்குரியவைகள்.

தரவேண்டாமா? அந்தகார அரசாட்சிக்குள் வாழும் மக்களை மீட்க வேண்டாமா? உலகத்தின் ஒளியாகவும் உப்பாகவும் பயன்பட வேண்டாமா?

ஆனால் சபை பல்வேறு நிலைகளில் தாழ்வடைந்திருக்கிறது. காரணம் ஜீவாதாரமான ஆண்டவரையும், அவரது ஆவியையும், அவருடைய வசனத்தையும் ஜெபத்தையும் விட்டு விட்டு உலகத்தின் வழிகளைத் தழுவிக் கொண்டது. பலமுறைகளில் அனேக சபை மக்கள் கெட்ட குமாரனைப் போல நடக்கிறார்கள் (லூக்.15:13-16 படிக்க)

எப்படியும் அவன் புத்தியடைந்து வீட்டுக்குத் திரும்பி வந்தான். அவன் வந்தபோது தந்தையானவர் அவனது வருகைக்காகக் காத்திருந்ததையும், தந்தையின் உறவைத் தொடர விரும்பியதையும் அவன் மீது அளவில்லா ஆசீர்வாதங்களைப் பொழிந்ததையும் கண்டான். சபையும் இன்று புத்தி தெளிந்து தனது வெதுவெதுப்பான நிலைக்காக மனஸ்தாபப்பட்டு, கர்த்தருக்கு நேராகத் திரும்பினால் தூய ஆவியானவர் மூலமாகவும் வேத வசனத்தின் மூலமாகவும் ஜெபத்தின் மூலமாகவும், வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மூலமாகவும் பெரிய காரியங்களைச் செய்ய முடியும்.

இயேசுவின் அழைப்பைப் பாருங்கள். "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல் நான் ஐசுவரியவானென்றும் திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால், நான் நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்கிறதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" வெளி.3:17-22.

**சபை தன்னை உலகத்தால் கறைப்படுத்தாமல் கிருபையிலும், பரலோக தன்மையிலும் வளர ஆண்டவருடைய சிந்தையை பெறவேண்டும்.**

## சபையின் உண்மையான ஜீவாதாரம்

### *The Church's true source of Life*

Rich Carmicheal

தேவனுடைய ஜனங்களாகிய நாம் கிறிஸ்துவில் எத்தனை மகிமையான அழைப்பைப் பெற்றிருக்கிறோம்! அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகளின்படி "நீங்களோ..... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை; இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள், முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள். இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்" *1 பேதுரு 2:9-10*. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறாரென கொலோ.*1:13*-ல் படிக்கிறோம்.

இப்போது நாம் நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள். உண்மையான திராட்சச் செடியாகிய அவரோடு இணைக்கப்பட்ட கொடிகள். மூலைக்குத் தலைக்கல்லாகிய அவரின் மேல் கட்டியெழுப்பப்பட்டவர்கள். உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகிய அவரோடு எழுப்பப்பட்டவர்கள். சபையின் தலையாகிய அவரது அவயவங்கள். ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய அவரது பிரஜைகள். உத்தமமும் உண்மையுமுள்ளவராகிய அவரைச் சார்ந்து வாழுகிறவர்கள். அவர் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமானவர். அவரே நமக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

மேலும் நம்மை வழிநடத்தவும், சுத்திகரிக்கவும் போதிக்கவும் அவரது வழிந்தோடும் ஜீவனாலும் அன்பினாலும் நிரப்பவும், ஊழியத்திற்காக நம்மைத் தரிப்பித்து வல்லமைப்படுத்தவும் தமது ஆவியை அருளியிருக்கிறார். இவைகளுக்கு மேலாக ஜீவனுள்ளதும் செயல்படுவதுமான வல்லமையான ஜீவ வசனத்தைத் தந்திருக்கிறார். அந்த வார்த்தை நம்மை போஷிக்கிறதும், தைரியப்படுத்துவதும், வழிநடத்துவதும், போதிப்பதும், பயிற்சியளிப்பதும், பிரகாசிப்பதும், எழுப்புதலடையச் செய்வதும், முற்றிலும் தரிப்பிப்பதுமாகும். மலைகளைப் பெயர்க்கத்தக்கதான ஜெபத்தை ஏறெடுக்கும் வாய்ப்பையும் தந்திருக்கிறார்.

இத்தகைய கிறிஸ்துவின் சமூகமும், வல்லமையையும் அவரது வலிமையையும், தூய ஆவியானவரையும், அவரது வல்லமையான வசனத்தையும், ஜெபம் என்னும் வரத்தையும் பெற்ற நாம் ஆவிக்குரிய வெற்றியோடு வாழவேண்டாமா? கர்த்தருடைய மகிமைக்காக அதிகமான கனிகளைத்

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

***Book Packets contains periodicals***

To